**சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்.**

**முன்னிலை : திரு.K.பழனிவேல், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 35/2018**

***TNCB 19000–010-2018***

1) திரு. ரவிச்சந்திரன்

2). திரு. ராஜப்பன்

3). திரு. சாம்ராஜ்

4). திரு. ராஜேந்திரன்

5). திரு. வெள்ளிங்கிரிசாமி

6). திரு. சுப்பிரமணி

7). திருமதி. அனுராதா

8). திரு. லட்சுமணசாமி

9). திரு. வெள்ளிங்கிரி

10). திரு. குருந்தாச்சலமூர்த்தி

11). திரு. சின்னராஜ்

12). திரு. கோபால்சாமி

13). திரு. பிரபாகரன்

14). திரு. செல்வம்

15). திரு. கோபிநாத்

16). திரு. பன்னீர்செல்வம்

17). திரு. துரைசாமி

18). திரு. ராஜப்பன்

19). திரு. பிரவீனாரச்சேல்

20). திரு. குப்புசாமி

21). திரு. கூளை

22). திரு. அருணாச்சலம்

23). திரு. மூர்த்தி

24). திருமதி. கிரிஜா **....வாதிகள்**

**//எதிர்//**

1). திரு. சொலையே கவுடர்

2). திரு. ரவிச்சந்திரன்

3). திரு. முருகேசன் **.... பிரதிவாதிகள்**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக 10.03.2026 அன்று விசாரணைக்கு வந்து, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.T. சிவப்புகழ், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. திருஞானசம்பந்தம், அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. மோகன்ராஜ், அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்ளை பரிசீலனை செய்தும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதத்தினை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## ***தீர்ப்புரை***

01). இவ்வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 – ன் கீழ் மீதித் கிரையத் தொகையை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிகளின் பெயருக்கு கிரையம் செய்து கொடுக்க கோரியும், தவறும்பட்சத்தில் நீதிமன்றத்தின் மூலம் வாதிகள் தங்கள் பெயருக்கு தாவா சொத்தை கிரையம் செய்யும் வகையில் உத்தரவு பிறப்பிக்க கோரியும், வழக்கின் செலவுத் தொகை வழங்க கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***02. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-***

தாவா சொத்தானது கடந்த 19.02.1977 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. மேலும், தாவா சொத்தை 1ம் பிரதிவாதி விலைக்கு கொடுப்பதாக தெரிவித்தன் பேரில், தாவா சொத்திற்கு ரூ. 7,11,000/- ம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் முன் பணத்தொகையாக ரூ. 5,00,000/-ஐ கடந்த 12.09.2014 அன்று வாதிகள் மற்றும் 2,3 ம் பிரதிவாதிகளிடமிருந்து 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டும், மீதித்தொகையை 3 மாத காலத்திற்குள் திரும்ப செலுத்தி தாவா சொத்தை கிரையம் செய்து கொள்ள வேண்டியது என, விற்கிரைய ஒப்பந்த பத்திரம் ஒன்று வாதிகள், 2,3 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகளுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட விற்கிரைய ஒப்பந்த பத்திரமானது தாவா சொத்தில் கிணறு வெட்டி, 1ம் பிரதிவாதி மற்றும் மற்றவர்களின் நிலத்தில் குழாய் பதித்து சோலார் மோட்டார் மூலம் தண்ணீரை வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் நிலத்திற்கு கொண்டு செல்ல வேண்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், 2,3 ம் பிரதிவாதிகள், தாவா சொத்தில் கிணறு வெட்டி, சோலார் மோட்டார் அமைப்பதற்காக வழங்கியத் தொகையை 2,3 ம் பிரதிவாதிகள் வாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு மேற்கண்ட விற்கிரைய ஒப்பந்த

பத்திரத்தில் இருந்து விலகிகொண்டார்கள். இந்நிலையில், மீதித் கிரையத்தொகையை செலுத்தி தாவா சொத்தை கிரையம் பெற வாதிகள் விருப்பமாகவும், தயாராகவும் இருந்தும் 1ம் பிரதிவாதி சொத்தை கிரையம் செய்து கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால், கடந்த 20.10.2017 அன்று வழக்கறிவிப்பு அனுப்பியும், அதனை 1ம் பிரதிவாதி கடந்த 28.10.2017 அன்று பெற்றுக்கொண்டும் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதி முன்வரவில்லை. எனவே, மேற்கண்ட விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதிக்கு உத்தரவிடக் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***<u>03. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் (2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)</u>***

வாதி வழக்குரையில் உரைத்துள்ள அனைத்து சங்கதிகளும் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையில் எவ்வித விற்கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், 2,3ம் பிரதிவாதிகளின் நிலம், 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு அருகில் உள்ளது. மேலும், 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் நெருங்கிய உறவினர்கள் ஆவார்கள். மேலும், 2,3 பிரதிவாதிகளின் நிலத்தில் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் இல்லாததால் அவர்கள் 1 ம் பிரதிவாதியின் நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க அனுமதி கேட்டதால் 1ம் பிரதிவாதி சம்மதம் தெரிவித்தார். மேலும், 2,3 பிரதிவாதிகள் கிணற்றுக்கு மின் இணைப்பு வாங்க வேண்டும் என தெரிவித்து 1ம் பிரதிவாதியிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டு, வாதிகளுடன் கூட்டு சேர்ந்து, தாவா சொத்து குறித்து விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை மோசடியாக 2,3 பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். தாவாவிற்கு உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்தவில்லை. மேலும், வாதிகள் வெள்ளியங்காடு

ஓடையில் இருந்து சட்ட விரோதமாக தண்ணீர் எடுக்க முயற்சித்து வருகிறார்கள். ஆகவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

*4.* ***இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு***

| | |
|---|---|
| *1* | *Whether the Plaintiffs are entitled to specific performance as prayed?* |
| *2* | *To what other relief?* |

05. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா. 2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பி.வா.சா.ஆ. 1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

***06). எழுவினா (அ) – விற்கான விவாதமும் , தீர்வும் :-***

***Whether the Plaintiff is entitled to the relief of specific performance as prayed in the plaint?***

வாதிகள் வழக்கு என்னவென்றால், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுப்பதாக சொன்னதன் பேரில், தாவா சொத்திற்கு ரூ. 7,11,000/- ம் என விலை நிர்ணயம் செய்து அதற்கு முன் பணமாக ரூ. 5,00,000/- ஐ 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு மீதி கிரையத் தொகையை 3 மாத காலத்திற்குள் திரும்ப செலுத்தி தாவா சொத்தை கிரையம் செய்து கொள்ள வேண்டியது என்ற நிபந்தனையின் அடிப்படையில் கடந்த 12.09.2014 அன்று வாதி, 2, 3 ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் விற்கிரைய உடன்படிக்கை பத்திரம் ஒன்றை ஏற்படுத்தி அதன்படி 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க முன் வராததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதேயாகும்.

07). 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கு என்னவென்றால், வாதிகளுடன் கூட்டு சேர்ந்து 2,3 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் சேர்ந்து மோசடியாக விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதேயாகும்.

08). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் நன்கு கவனமாக பரிசீலனை செய்ததில், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும், தாவா சொத்து குறித்து வாதிகள், 2,3 ம் பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இடையில் விற்கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

09). மேற்கண்ட வாதிகள் தரப்பு வழக்கை வாதிகள் முதல் நோக்கில் **இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 101 (பாரதிய சாக்ஷ்ய அதிநியம் சட்டம் பிரிவு 104 ) படி** நிரூபிக்க வேண்டியது வாதிகளின் கடமையாகும். மேற்கண்ட வாதிகளின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்கையில் வாதிகள் தரப்பில் 7ம் வாதி திருமதி. அனுராதா அவர்கள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட வா.சா.1 திருமதி. அனுராதா தனது சாட்சியத்தில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு ரூ. 5,00,000/- ஐ முன் தொகையாக பெற்றுக் கொண்டு மீதி மறுபயன் தொகையை 3 மாத காலத்திற்குள் பெற்றுக் கொண்டு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக கடந்த 12.09.2014 அன்று சாட்சிகள் முன்னிலையில் விற்கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தியதாக சொல்லி அந்த சங்கதியை நிரூபிக்கும் வகையில் 12.09.2014 ம் தேதியிட்ட விற்கிரைய உடன்படிக்கை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். அந்த விற்கிரைய உடன்படிக்கை பத்திரம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10). மேலும், வா.சா.1 தனது சாட்சியத்தில், மேற்கண்ட விற்கிரைய ஒப்பந்த

பத்திரத்தின் படி தாவா சொத்தை கிரையம் பெற வாதிகள் விருப்பமாகவும், தயாராகவும் இருந்தும் கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதி முன் வராததால் வழக்கறிவிப்பு அனுப்பி வைத்துள்ளார். மேற்கண்ட வழக்கறிவிப்பு வாதிகள் தரப்பில் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11). இந்நிலையில், 1ம் பிரதிவாதி தரப்பில், வாதிகளுடன் கூட்டு சேர்ந்து 2,3 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் சேர்ந்து மோசடியாக விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்ய 1ம் பிரதிவாதி திரு. சொலையே கவுடர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட பி.வா.சா.1 தனது சாட்சியத்தில், வாதிகளுக்கும், தனக்கும் இடையில் எவ்வித விற்கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் மேலும், 2,3 ம் பிரதிவாதிகளின் நிலம், தனது நிலத்திற்கு அருகில் உள்ளது எனவும் மேலும், 2,3 பிரதிவாதிகள் தனது நெருங்கிய உறவினர்கள் என்றும் மேலும், 2,3 பிரதிவாதிகளின் நிலத்தில் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் இல்லாததால் அவர்கள் தனது நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க அனுமதி கேட்டதால் தான் சம்மதம் தெரிவித்ததாகவும் மேலும், 2,3 பிரதிவாதிகள் கிணற்றுக்கு மின் இணைப்பு வாங்க வேண்டும் என தெரிவித்து தன்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டு, வாதிகளுடன் கூட்டு சேர்ந்து, தாவா சொத்து குறித்து விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை மோசடியாக 2,3 பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ளதாகவும் தாவாவிற்கு உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்தவில்லை எனவும் மேலும், வாதிகள் வெள்ளியங்காடு ஓடையில் இருந்து சட்ட விரோதமாக தண்ணீர் எடுக்க முயற்சித்து

வருகிறார்கள் என தனது சாட்சியத்தை முன் வைத்துள்ளார்.

12). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும், இரு தரப்பு சாட்சியங்களையும் நன்கு கவனத்துடன் ஆராய்ந்து பரிசீலனை செய்கையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தினை வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து மின் இணைப்பு பெறுவதற்காக கையெழுத்து செய்யச் சொல்லி மோசடியாக பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளாரே தவிர, வா.சா.ஆ. 1 விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து அல்ல என்பதை பொறுத்து எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை.

13). இந்நிலையில், மேற்கண்ட ஆவணமானது மின் இணைப்பு பெறுவதற்காக எனக்கூறி மோசடியாக வா.சா.ஆ.1 ல் கையொப்பம் பெற்றதாக 1ம் பிரதிவாதி தரப்பில் கூறியதை பரிசீலனை செய்கையில், அதை உரிய சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க வேண்டியது 1ம் பிரதிவாதியின் கடமையாகும். மேலும், 1ம் பிரதிவாதியின் சாட்சியத்தை உறுதிபடுத்தும் விதமாக அவரது மகன் திரு. நடராஜ் என்பவர் பி.வா.சா. 2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட பி.வா.சா.2 தனது சாட்சியத்தில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தினை வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து மின் இணைப்பு பெறுவதற்காக கையெழுத்து செய்ய சொல்லி மோசடியாக பெற்றுக்கொண்டதாக தெரிவித்துவிட்டு, குறுக்கு விசாரணையில், 12.09.2014 ம் தேதியன்று தனது அப்பாவும், வாதிகளும் 2, 3 பிரதிவாதிகளும் விற்கிரைய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ. 1 ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ 1ல் தனது அப்பா கையெழுத்திட்டதாகவும், விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் படி வாதிகள் பாக்கி பணத்தை செலுத்தி கிரையம் பெற தயாராக இருந்தும் அசல் பத்திரம் இல்லாததால் கிரையம் கொடுக்க கால தாமதம் ஏற்பட்டதாகவும், ஒப்பந்த தேதி முதல் இன்றைய தேதி

வரை ஒப்பந்தப் படி கிரையம் பெற வாதிகள் தயாராகவும், விருப்பத்துடனும் இருந்து வருவதாக தெரிவித்துள்ளதை பொறுத்து மறுப்பு தெரிவிக்காமல் ஒப்புக்கொண்டுள்ளதை வைத்து பார்க்கும் போது, வாதிகள் வா.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் படி, தாவா சொத்தை கிரையம் பெற விருப்பமாகவும், தயாராகவும் இருந்து வருகிறார்கள் என்பது மேற்கண்ட சாட்சியத்திலிருந்து புலனாகிறது.

14). இந்நிலையில், 1ம் பிரதிவாதி தரப்பில் மின் இணைப்பு பெறுவதற்காக வேண்டி வா.சா.ஆ. 1 ல் மோசடியாக கையொப்பம் பெற்றுக்கொண்டதாக தெரிவித்த சங்கதியைப் பொறுத்து உரிய சாட்சியத்தின் மூலம் நிரூபிக்காததால் மேற்கண்ட சங்கதியைப் பொறுத்து ஏற்றுக்கொள்ளும் இல்லையென்றே இந்நீதிமன்றம் கருதி வாதிகள் வா.சா. ஆ. 1 விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் படி தாவா சொத்தை கிரையம் பெற விருப்பமாகவும், தயாராகவும் இருந்துள்ளார்கள் என்பது புலனாவதால் வாதிகள் வழக்கில் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதென எழுவினா 1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

***<u>15). எழுவினா (ஆ) – விற்கான விவாதமும் , தீர்வும் :-</u>***

***<u>Whether the Plaintiff is entitled to any other relief?</u>***

எழுவினா (அ) விற்கான விவாதத்தில் வாதிக்கு கிடைக்கக்கூடிய பரிகாரம் குறித்து தெளிவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வேறெந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்லவென எழுவினா (ஆ) விற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**16). இறுதியாக,**

*வாதிகளின் தாவா பிரதான பரிகாரத்தை பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. 12.09.2014 ம் தேதியிட்ட விற்கிரைய ஒப்பந்தத்தின்படி ஒரு மாத காலத்திற்குள் தாவா சொத்தை வாதிகளின் பெயருக்கு 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க வேண்டும். 1ம் பிரதிவாதி தவறும்பட்சத்தில்*

*வாதிகளின் செலவு தொகையில் நீதிமன்றத்தின் மூலம் வாதிகளின் பெயருக்கு கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. வாதிகளின் பெயருக்கு தாவா சொத்து கிரையம் செய்து கொடுத்த வகையில் வாதிகளுக்கு தாவா சொத்தை 1ம் பிரதிவாதி சுவாதீனம் கொடுக்க தவறும் பட்சத்தில் வாதிகள் நீதிமன்றம் மூலம் சுவாதீனம் பெற்றுக் கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.*

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதனை, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு, மார்ச் திங்கள் 13 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மேட்டுப்பாளையம்.**

**1). வாதி தரப்பு சாட்சிகள் பட்டியல்** :-

| **வ. எண்** | **சாட்சி பெயர்** | **சாட்சிய வரிசை** |
|---|---|---|
| 1). | திருமதி. அனுராதா | வா.சா.1 |
| 2). | திரு. ஜெயராஜன் | வா.சா.2 |

**2). வாதி தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்** : -

| **வ. எண்** | **தேதி** | **சான்றாவண விபரம்** | **ஆவண வரிசை** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|---|
| 1). | 12.09.2014 | விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் | வா.சா.ஆ.1 | அசல் |
| 2). | – | வழக்கறிவிப்பு | வா.சா.ஆ.2 | அசல் |
| 3). | – | அஞ்சல் ஒப்புகை அட்டை | வா.சா.ஆ.3 | அசல் |
| 4). | – | பதிலறிவிப்பு | வா.சா.ஆ.4 | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5). | – | விற்கிரைய ஒப்பந்த பத்திரம் | வா.சா.ஆ.5 | அசல் |
| 6). | – | பட்டா | வா.சா.ஆ.6 | இணையத்தள நகல் |
| 7). | – | புல வரைபடம் | வா.சா.ஆ.7 | நகல் |

**3). பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1 | திரு. சொலையே கவுடர் | பி.வா.சா.1 |
| 2 | திரு. நடராஜன் | பி.வா.சா.2 |

**4). பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | --- | கிரையப்பத்திரம் | பி.வா.சா.ஆ.1 | நகல் |
| 2 | --- | கிரையப் பத்திரம் | பி.வா.சா.ஆ 2 | நகல் |
| 3 | --- | தான செட்டில்மெண்ட் பத்திரம் | பி.வா.சா.ஆ 3 | நகல் |
| 4 | --- | தான செட்டில்மெண்ட் பத்திரம் | பி.வா.சா.ஆ 4 | நகல் |
| 5 | --- | அசல் வழக்கு எண். 188 /2015 | பி.வா.சா.ஆ 5 | நகல் |
| 6 | --- | பட்டா | பி.வா.சா.ஆ 6 | நகல் |

**சார்பு நீதிபதி,**

**மேட்டுப்பாளையம்.**

*அ.வ.எண். 35/2018*

*13.03.2026*

***சீரான தீர்ப்புரை***